# நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

அனுப்புநர்
திரு.சு.ரவிச்சந்திரன் பி.ஏ.,
ஆணையாளர்,
நகராட்சி அலுவலகம்,
கடையநல்லூர்.

பெறுநர்.
நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,
திருநெல்வேலி.

**ந.க..எண். 1838/2022/அ1** **நாள்: 10.10.2022**

**அய்யா,**

**பொருள்:-** நகர்மன்ற கூட்ட நடவடிக்கைகள் –கடையநல்லூர் நகராட்சி – அக்டோபர்–2022 மாதம் நகர்மன்ற கூட்டம் நடத்தப்பட்டது– கூட்ட நடவடிக்கை விபரங்கள் அனுப்பிவைத்தல்– சார்பாக.

**பார்வை.** நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் குறிப்பாணை கடித ந.க.எண்.2652/2022/அ3, நாள்.18.07.2022.

*****

பார்வையில் காணும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி, இந்நகராட்சியில் 07.10.2022 அன்று நடைபெற்ற சாதாரணக் கூட்டத்தின், கூட்ட நடவடிக்கை விபரங்கள் இத்துடன் இணைத்து பணிந்து அனுப்பி வைக்கப்படுகிறது.

ஆணையாளர்,
கடையநல்லூர் நகராட்சி.

**இணைப்பு.**
07.10.2022 அன்று நடைபெற்ற
நகர்மன்றக்கூட்டப் பொருள்

**நகல் பணிந்து சமர்பிக்கப்படுகிறது.**

1. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை.
2. மாவட்ட ஆட்சித்தலைவர், தென்காசி.

## கடையநல்லூர் நகராட்சி

## 07.10.2022 அன்று நடைபெற்ற சாதாரணக் கூட்டப்பொருள்கள் விவரம்.

**பொருள் எண்.1**

இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் இயங்கும் TATA ACE மினி TN76M7465 வாகனத்தின் ஜாயிண்ட் ஸ்டார் மற்றும் கியர் டாப், என்ட் ஆகிய பழுதுகள் சரி செய்ய 23.08.2022 அன்று குறுகிய கால விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட நிறுவனங்களிலிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | விலைப்புள்ளி கொடுத்தவர்களின் விபரம் | மொத்த விலை விகிதம் (ரூ) |
|---|---|---|
| 1. | ஸ்ரீமுருகா மோட்டார்ஸ் ஒர்க்ஸ்<br>கொட்டாகுளம்,<br>செங்கோட்டை. | ரூ.5950/– |
| 2. | கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ்,<br>புது குடியிருப்பு,<br>நாகர்கோவில் –629 001. | ரூ.7000/– |
| 3. | மூஸா இன்ஜினியரிங் ஒர்க்ஸ்,<br>செங்கோட்டை ரோடு,<br>தென்காசி. | ரூ.6850/– |

மேற்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள வரிசை எண்.1ல் உள்ள ஸ்ரீ முருகா மோட்டார்ஸ் ஒர்க்ஸ், செங்கோட்டை நிறுவனம் மூலம் பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்2224/2022/எச்1)

**தீர்மானம் எண்:–170**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.2**

இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் இயங்கும் TATA ACE TN76M7486 வாகனத்தின் 4 டயர்களும் வாகனத்தை இயக்க முடியாத அளவிற்கு தேய்மானம் அடைந்துள்ளதால் அதனை மாற்றி புதிய டயர்கள் வாங்கி பொருத்துவதற்கு நகர்மன்ற தீர்மானம் எண்.158/29.08.2022ன்படி உத்தேச செலவினத்தொகை ரு.15900/–க்கு அனுமதி வழங்கப்பட்டதன் அடிப்படையில் 23.08.2022அன்று குறுகிய கால விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட நிறுவனங்களிலிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | விலைப்புள்ளி கொடுத்தவர்களின் விபரம் | மொத்த விலை விகிதம் (ரூ) |
|---|---|---|
| 1. | ஸ்ரீஅம்பாள் மோட்டார் ஒர்க்ஸ்,<br>ரயில்வே ஸ்டேசன் தென்புறம்,<br>தென்காசி. | ரூ.16200/– |
| 2. | மாதவா மோட்டார்ஸ்,<br>கிருஸ்து நகர் மெயின்ரோடு,<br>வெள்ளமடம் | ரூ.16500/– |
| 3. | ஸ்ரீமுருகா மோட்டார்ஸ் ஒர்க்ஸ்<br>கொட்டாகுளம்,<br>செங்கோட்டை. | ரூ.15900/– |

மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள வரிசை எண்.3ல் உள்ள ஸ்ரீ முருகா மோட்டார்ஸ் ஒர்க்ஸ், செங்கோட்டை மூலம் பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்2156/2022/எச்1)**

**தீர்மானம் எண்:– 171**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.3**

இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் இயங்கும் TATA ACE மினி ஆட்டோ TN76AP4394 வாகனத்தின் முன்பக்க கண்ணாடி உடைந்துள்ளது அதனை மாற்றி புதிய கண்ணாடி பொருத்துவதற்கு 02.08.2022 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட நிறுவனங்களிலிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | விலைப்புள்ளி கொடுத்தவர்களின் விபரம் | வேலை விபரம் அதற்கான செலவினத் தொகை (ரூ) | மொத்த விலை விகிதம் (ரூ) |
|---|---|---|---|
| 1. | ஸ்ரீமுருகா மோட்டார்ஸ் ஒர்க்ஸ்<br>கொட்டாகுளம்,<br>செங்கோட்டை. | முன்பக்க கண்ணாடி ரூ.4500/–<br>முன்பக்க கண்ணாடி ரப்பர் ரூ.600/–<br>கூலி ரூ.1300/– | ரூ.6400/– |
| 2. | ஸ்ரீகணேஷ் மோட்டார் ஒர்க்ஸ்,<br>புது குடியிருப்பு,<br>நாகர்கோவில் –629 001. | முன்பக்க கண்ணாடி ரூ.5000/–<br>முன்பக்க கண்ணாடி ரப்பர் ரூ.800/–<br>கூலி ரூ.1500/– | ரூ.7300/– |
| 3. | ஜெனரல் மோட்டார்ஸ்,<br>5/2, சாந்தி நகர்,<br>பாளையங்கோட்டை. | முன்பக்க கண்ணாடி ரூ.5000/–<br>முன்பக்க கண்ணாடி ரப்பர் ரூ.750/–<br>கூலி ரூ.1500/– | ரூ.7250/– |

மேற்கண்ட வாகனத்தில் கண்ணாடி பொருத்துவதற்கு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள ஸ்ரீ முருகா மோட்டார்ஸ் ஒர்க்ஸ், செங்கோட்டை நிறுவனம் மூலம் பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் மேற்கண்ட கண்ணாடி உடைந்தற்கு காப்பீட்டு நிறுவனமான யுனைடட் இந்திய இன்சூரன்ஸ் நிறுவனம் இந்நகராட்சி வங்கி கணக்கு எண்.11408ல் 03.08.2022ல் வழங்கிய தொகை ரூ.6500/– லிருந்து மேற்கண்ட கண்ணாடி பொருத்துவதற்கு செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

<u>அலுவலக குறிப்பு</u>:-

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.441/2022/எச்1)**

**தீர்மானம் எண்:– 172**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.4**

இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் வாகனம் TN76A5635 மினி டிப்பர் லாரிக்கு தகுதிச்சான்று பெறும் பொருட்டு உத்தேச செலவுத்தொகை ரூ.80000/–க்கு நகர்மன்ற தீர்மானம் எண்.56/31.05.2022ன்படி அனுமதி பெறப்பட்டது. அதனடிப்படையில் 10.06.2022ம் தேதி வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள ஸ்ரீ முருகா மோட்டார்ஸ் ஒர்க்ஸ், செங்கோட்டை மூலம் பணிகள் மேற்கொண்டமைக்கு அதற்கான பட்டியல் தொகை ரூ.79910/– வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர்களின் விபரம் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் (ரூ) |
|---|---|---|
| 1. | ஸ்ரீமுருகா மோட்டார்ஸ் ஒர்க்ஸ்<br>கொட்டாகுளம்,<br>செங்கோட்டை. | ரூ.79910/– |
| 2. | ஸ்ரீவிநாயகா மோட்டார்ஸ்,<br>பாபநாசம் ரோடு அம்பாசமுத்திரம் | ரூ.84000/– |

அலுவலக குறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1164/2022/எச்1)**

**தீர்மானம் எண்:– 173**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.5**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனங்கள் கீழ்காணும் பட்டியலில் கண்டுள்ளவாறு கழிவு நீக்கம் (Condomnation) செய்ய வேண்டியுள்ளதால் வட்டார போக்குவரத்து அலுவலகத்துக்கு செலுத்த வேண்டிய வரி பாக்கி ரூ.29264/– செலுத்தவும் மேலும் புகைச்சான்று மற்றும் இணையவழி முறையில் கட்டணங்கள் செலுத்துவதற்கான கட்டணம் ரூ.2000/– ஆக மொத்தம் ரூ.31264/– செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | வாகன எண் | விபரம் | வரிநிலுவைத் தொகை |
|---|---|---|---|
| 1. | TN72U2038 | டிராக்டர் | 500 |
| 2. | TN76U5204 | டிரைலர் | 1000 |
| | TN76B1197 | டிப்பர்லாரி | 2494 |
| | TN76E4129 | டம்பர் | 25270 |
| | | வட்டார போக்குவரத்து அலுவலக செலவினங்கள் | 2000 |
| | | மொத்தம் | 31264 |

அலுவலக குறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2589/2022/எச்1)**

**தீர்மானம் எண்:– 174**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.6**

இந்நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற நகர்மன்ற கூட்டத்திற்கு தேவையான கூட்டப்பொருள்கள் (Agenda) கீழ்க்கண்ட விபரப்படி ஜெராக்ஸ் எடுத்த வகைக்கு தொகை ரூ.14400/–ஐ **திரு.V.முருகேசன் – ராஜம் ஜெராக்ஸ், 139/1, நியூ பஜார், கடையநல்லூர்** என்பவருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | மாதம் | பக்கங்களின் எண்ணிக்கை | பக்கம் 1க்கு ரூபாய் | மொத்தம் | தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1. | 28.03.2022 | சாதாரண கூட்டம் – 9 | 2 | 60 செட் | 1080 |
| 2. | 11.04.2022 | அவசரக் கூட்டம் –15 | 2 | 60 செட் | 1800 |
| 3. | 29.04.2022 | சாதாரண கூட்டம் – 17 | 2 | 60 செட் | 2040 |
| 4. | 24.05.2022 | அவசரக் கூட்டம் –12 | 2 | 60 செட் | 1440 |
| 5. | 31.05.2022 | சாதாரண கூட்டம் – 8 | 2 | 60 செட் | 960 |
| 6. | 30.06.2022 | சாதாரண கூட்டம் – 28 | 2 | 60 செட் | 3360 |
| 7. | 29.07.2022 | சாதாரண கூட்டம் – 14 | 2 | 60 செட் | 1680 |
| 8. | 29.08.2022 | சாதாரண கூட்டம் – 17 | 2 | 60 செட் | 2040 |
| | | | | மொத்தம் | 14400 |

அலுவலக குறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2709/2022/இ2)**

**தீர்மானம் எண்:–175**

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.7

இந்நகராட்சி பேருந்து நிலையம் மற்றும் வாரச்சந்தையில் உள்ள கடைகளுக்கு உரிமக்காலம் கீழ்கண்ட விபரப்படி முடிவடைவதால் மேலும் மூன்றாண்டுகளுக்கு புதுப்பிக்கக்கோரி வாடகை உரிமைதாரர்கள் மனுச்செய்துள்ளனர்.மேற்படி கடைகளுக்கு உரிமம் புதுப்பிக்க கடை ஒன்றிக்கு ரூ.500/– வீதம் புதுப்பித்தல் கட்டணம் செலுத்தியுள்ளனர்.எனவே மேற்படி வாடகை உரிமதாரர்களுக்கு கீழ்கண்டவாறு உரிமம் புதுப்பித்து உத்திரவு வழங்கவும் , ஏற்கனவே வசூல் செய்துவரும் தொகையில் 15% சதவீதம் உயர்வு செய்து நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | வாடகை உரிமைதாரா் பெயர், கடை விபரம், தீர்மான எண். | முடிவடையும் உரிம காலம் | புதுப்பிக்க வேண்டிய உரிமக்காலம் | தற்போதைய கேட்புத் தொகை | புதுப்பித்தலுக்கு பின் கேட்புத் தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | திரு.சாகுல் கமீது,<br>62/19பி.அழகுமகுதனன் தென்வடல் தெரு, பேட்டை.<br>வாரச்சந்தை கடைஎண.2 | 1.04.2019–31.3.2022 | 01.04.2022–31.03.2025 | 1064 | 1224 |
| 2 | திரு.சாகுல் கமீது,<br>62/19பி.அழகுமகுதனன் தென்வடல் தெரு, பேட்டை.<br>வாரச்சந்தை கடைஎண.3 | 1.04.2019–31.3.2022 | 01.04.2022–31.03.2025 | 1064 | 1224 |
| 3 | இசக்கி முத்து ,<br>த/பெ.கோமதி,<br>60, காதர் மைதீன் பள்ளிவாசல் தெரு,<br>வாரச்சந்தை கடை எண்.9 | 1.04.2019–31.3.2022 | 01.04.2022–31.03.2025 | 1065 | 1225 |
| 4 | ரசூல் பீவி,<br>த/பெ. ரஹ்மத்துல்லா,<br>வாரச்சந்தை கடை எண்.41 | 1.06.2019–31.5.2022 | 01.06.2022–31.05.2025 | 1250 | 1438 |
| 5 | பரமபூல்துரை,<br>18பி, தெற்கு ரதவீதி,<br>மேலக்கடையநல்லூர் –<br>பேருந்து நிலை கடைஎண்9 | 1.04.2019–31.3.2022 | 01.04.2022–31.03.2025 | 1900 | 2185 |
| 6 | ஏ.பி.எம்.மைதீன்,<br>83,மெயின் ரோடு,<br>கிருஷ்ணாபுரம்.<br>பேருந்து நிலை கடைஎண்1<br>(கிழக்கிலிருந்து மேற்காக) | 1.04.2019–31.3.2022 | 01.04.2022–31.03.2025 | 3700 | 4255 |
| 7 | சிவஞானம்,<br>24, கற்பக சுந்தர விநாயகர் கோவில் தெரு, கிருஷ்ணாபுரம்,<br>பேருந்து நிலை தெற்குப்பக்கம் கடைஎண்2 (கிழக்கிலிருந்து மேற்காக) | 1.04.2019–31.3.2022 | 01.04.2022–31.03.2025 | 4500 | 5175 |

<u>அலுவலக குறிப்பு</u>:-

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.4959/2022/சி2)

**தீர்மானம் எண்:– 176**

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.8

2018–2021 வரை கடையநல்லூர் நகராட்சி பேருந்து நிலையத்திலுள்ள கட்டணக்கழிப்பிடம் குத்தகை உரிமம் பெற்று திரு.பழனிக்குமார், த/பெ. பாலசுப்பிரமணி 7வது வார்டு எம்.ஜி.ஆர். நகர் , உசிலம்பட்டி என்பவர் 2020–2021 ம் ஆண்டில் கொரோனா தொற்று நோய் தடுப்பு நடவடிக்கையாக அரசால் முழு ஊரடங்கு பிறப்பிக்கப்பட்ட காலங்களில் உரிய இழப்பீடு கேட்டு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் (W.P (MD) No.1490/2021) வழக்கு தொடர்ந்திருந்தார். 28.07.2022ம் தேதியில் தீர்ப்பாகியுள்ள மேற்கண்ட வழக்கிற்கான வழக்குக்கட்டணம் ரூ.10000/– வழங்கக்கோரி சென்னை

உயர்நீதிமன்ற மதுரைக்கிளை வழக்கிறிஞர், திரு.எம்.ராஜராஜன் அவர்கள் கேட்பு அனுப்பியுள்ளார். அதன்படி மேற்கண்ட தொகையை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண்.550/2021/சி2)**

**தீர்மானம் எண்:– 177**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.9**

இயக்குநர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் கோயம்புத்தூர் அவர்களது ந.க.எண்.471/2022/அ2 நாள்.23.08.2022 கடிதத்தில் 2022–2023ம் ஆண்டிற்கு கடையநல்லூர் நகராட்சி (முதல் நிலை ) நிர்வாக பங்குத்தொகை ரூ.75000/– ஐ செலுத்திட தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி கடையநல்லூர் நகராட்சிக்கு ஒதுக்கீடு செய்யபட்டுள்ள நிர்வாக பங்குத்தொகை ரூ.75000/– மேற்கண்ட நிறுவனத்திற்கு செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண்.2370/2022/சி1)**

**தீர்மானம் எண்:– 178**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.10**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.5990/2022/SBM நாள்.11.04.2022ல் **தூய்மை இந்தியா திட்டம் SBM (U) -2.O 2021–2022**ன் கீழ் ரூ.49.92/– இலட்சம் மதிப்பீட்டில் கீழ்காணும் விபரப்படி இந்நகராட்சிப்பகுதியில் இரண்டு இடங்களில் 16 இருக்கைகள் கொண்ட சமுதாய கழிப்பறைகள் மற்றும் 6 இருக்கைகள் கொண்ட சிறுநீர் பிறைகள் அமைக்க நிர்வாக அனுமதி வழஙகப்பட்டது.

| எண் | பணிகளின் விபரம் | இருக்கைகளின் எண்ணிக்கை | | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|---|
| | | கழிப்பறை | சிறுநீர் பிறை | |
| 1. | வார்டு எண்.3 கொழும்பு தெரு நுண்ணுயிர் உரக்குடில் மையம் **(MCC)** அருகில் புதிதாக சமுதாய கழிப்பறை கட்டும் பணி. | 16 | **6** | ரூ.**26.50/–** |
| 2. | வார்டு எண்.26 பண்பொழி ரோடு பகுதியில் புதிதாக சமுதாய கழிப்பறை கட்டும் பணி. | 16 | **6** | ரூ.**26.50/–** |
| **மொத்தம்** | | **32** | **12** | **ரூ.53.00/–** |

மேற்காணும் விபரப்படி தூய்மை இந்தியா திட்டம் SBM (U)-2.O 2021–2022ன் கீழ் நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட பணிகளுக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கு உரிய தொழில் நுட்ப அனுமதி வழங்க மண்டல செயற்பொறியாளர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகம், திருநெல்வேலி அவர்களுக்கு கடிதம் அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இத்திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.49.92/– இலட்சத்திற்கு கூடுதலாக ஏற்படும் செலவீனத்தை இந்நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

3. திட்டப்பணியின் அவசர, அவசியத்தை கருத்தில் கொண்டு நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 1233/2022/இ1)**

**தீர்மானம் எண்:– 179**

அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண். 11**

பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி வளர்ச்சித் திட்டம் 2021–2022ன் கீழ் தென்காசி பாராளுமன்ற உறுப்பினர் திரு.தனுஷ் M.குமார் அவர்களால் பரிந்துரைக்கப்பட்ட கடையநல்லூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அருகில் பேருந்து நிறுத்தம் அமைக்கும் பணியினை ரூ.5,00,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள தென்காசி, மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.அ3/3189/2021, நாள். 01.08.2022ன் படி நிர்வாக அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையில், மேற்காணும் பணிக்கு 09.09.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் | டேவணித் தொகை |
|---|---|---|
| M/s.MITHUN TRADERS,<br>No.4, Astalakshmi Nagar,<br>GTN Salai,<br>Dindigul – 624 005. | **0.23%**<br>குறைவு | ரூ.5000/– SBI, Tenkasi D.D.No.183682, நாள். 09.09.2022ன் படி சமர்பித்துள்ளார். |
| M/s. Innovo tronics,<br>Shop no.1, Vasumathinagar,<br>Ayynam palayam,<br>Villupuram – 605 601. | **0.19%**<br>அதிகம் | ரூ.5000/– SBI, Tenkasi D.D.No.183683, நாள். 09.09.2022ன் படி சமர்பித்துள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும், மதிப்பீட்டைக் காட்டிலும் **0.23%** சதவீதம் குறைவாகவும் கொடுத்துள்ள M/s.MITHUN TRADERS, Dindigul – 624 005 நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 5980/2022/இ1)**

**தீர்மானம் எண்:– 180**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 12**

பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி வளர்ச்சித் திட்டம் 2021–2022ன் கீழ் தென்காசி பாராளுமன்ற உறுப்பினர் திரு.தனுஷ் M.குமார் அவர்களால் பரிந்துரைக்கப்பட்ட கடையநல்லூர் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு பேருந்து நிறுத்தம் அமைக்கும் பணியினை ரூ.5,00,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள தென்காசி, மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.அ3/3189/2021, நாள். 01.08.2022ன் படி நிர்வாக அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையில், மேற்காணும் பணிக்கு 09.09.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் | டேவணித் தொகை |
|---|---|---|
| M/s.MITHUN TRADERS,<br>No.4, Astalakshmi Nagar,<br>GTN Salai,<br>Dindigul – 624 005. | **0.23%**<br>குறைவு | ரூ.5000/– SBI, Tenkasi D.D.No.183682, நாள். 09.09.2022ன் படி சமர்பித்துள்ளார். |

| | | |
|---|---|---|
| M/s. Innovo tronics,<br>Shop no.1, Vasumathinagar,<br>Ayynam palayam,<br>Villupuram – 605 601. | **0.19%**<br>**அதிகம்** | ரூ.5000/– SBI, Tenkasi D.D.No.183683, நாள். **09.09.2022**ன் படி சமர்பித்துள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும், மதிப்பீட்டைக் காட்டிலும் **0.23%** சதவீதம் குறைவாகவும் கொடுத்துள்ள M/s.MITHUN TRADERS, Dindigul – 624 005 நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 5980/2022/இ1)**

**தீர்மானம் எண்:– 181**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 13**

மாண்புமிகு நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் அவர்களின் தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்பு **2022–2023**, நாள்.**07.04.2022** அறிவிப்பு எண்.**16**–ல் நகரத்தில் காற்றோட்டமான பகுதிகளில் Lung Space அதிகரிக்கும் நடவடிக்கையாக **124** நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் தேக்கத்திடக்கழிவுகளை Bio – Mining முறையில் அகற்றி மீட்கப்பட்டுள்ள **369** ஏக்கர் நிலத்தில் ரூ.**25.00** கோடி மதிப்பீட்டில் நகர்புற காடுகள் உருவாக்கப்படும் என அறிவித்துள்ளதற்கிணங்க, இந்நகராட்சிக்கு சொந்தமான போகநல்லூர் உரக்கிடங்கில் காலியாக உள்ள **6** ஏக்கர் பரப்பளவில் ஒரு வருடம் முதல் இரண்டு வருடம் வரை வளர்ந்த வேம்பு–**600**, கொடுக்காப்புளி –**600**, நாவல், நெல்லி, புளியமரம் மூன்றும் சேர்த்து மொத்தம் –**1200**, மற்றும் பாதாம் – **298** ஆக மொத்தம் **2698** மரக்கன்றுகள் குழியிட்டு நடுதல் மற்றும் மூன்று மாதங்களுக்கு தொடர்ந்து வாரத்திற்கு இரண்டுமுறை நீர்ப்பாசனம் செய்து பராமரிக்கும் பணியினை ரூ.7,78,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ந.க.எண்.18277/2022/CFC–1, நாள். **26.08.2022**ன் படி நிர்வாக அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையில், மேற்காணும் பணிக்கு **14.09.2022** அன்று குறுகியகால ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| **ஒப்பந்தக்காரர் பெயர்** | **ஒப்பந்த சதவீதம்** | **டேவணித் தொகை** |
|---|---|---|
| திரு. P.பாலசுப்பிரமணியன்,<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | **0.17%**<br>**குறைவு** | ரூ.7700/– செல்லான் எண்: **141/001/2/22–23/0003501** மற்றும் **3502** நாள். **14.09.2022**ன் படி செலுத்தியுள்ளார். |
| திரு.V.வெள்ளத்துரை,<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | **1.51%**<br>**அதிகம்** | ரூ.**10000**/– IOB Bazar Street Kadayanallur , D.D.No.135162, நாள். **14.09.2022**ன் படி சமர்பித்துள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும், மதிப்பீட்டைக் காட்டிலும் **0.17%** சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு. P.பாலசுப்பிரமணியன், ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. திட்டப்பணியின் அவசர, அவசியத்தை கருத்தில் கொண்டு நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 2385/2022/இ1)**

**தீர்மானம் எண்:– 182**

அங்கீகரிக்கப்பட்டது

பொருள் எண்.14

இந்நகராட்சிக்கு சொந்தமான மேலக்கடையநல்லூர் நகராட்சி துவக்கப்பள்ளியில் மீத்திறன் வகுப்பறை (Smart Class Room) அமைக்கும் பணியினை ரூ.9,75,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர் மன்ற தீர்மான எண்.109, நாள்.30.06.2022–ல் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில், மேற்காணும் பணிக்கு 14.09.2022 அன்று குறுகியகால ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் | டேவணித் தொகை |
|---|---|---|
| AVN TRADERS,<br>No.23, Keeladevathanam,<br>Theppakulam Post,<br>Tirchy – 620 002. | **0.06%**<br>**அதிகம்** | ரூ.9750/– AXIS BANK LTD, Kadayanallur, DD No.001887 நாள். 13.09.2022ன் படி சமர்பித்துள்ளார். |
| Future Tech Automation system,<br>2/68A, B.Gettur, Kethanahalli ,<br>Karimangalam (TK),<br>Dharmapurai (Dt) – 636 808. | **0.06%**<br>**குறைவு** | ரூ.9750/– செல்லான் எண்: 141/001/2/22–23/0003437 , நாள். 13.09.2022ன் படி செலுத்தியுள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும், மதிப்பீட்டைக் காட்டிலும் **0.06%** சதவீதம் குறைவாக கொடுத்துள்ள M/s.Future Tech Automation system, Dharmapurai நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு–</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2385/2022/இ1)

**தீர்மானம் எண்:– 183**

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.15

இந்நகராட்சிக்கு சொந்தமான மேலக்கடையநல்லூர் நகராட்சி துவக்கப்பள்ளியில் (Smart Table) அமைக்கும் பணியினை ரூ.5,50,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர் மன்ற தீர்மான எண்.109, நாள்.30.06.2022–ல் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில், மேற்காணும் பணிக்கு 14.09.2022 அன்று குறுகியகால ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் | டேவணித் தொகை |
|---|---|---|
| AVN TRADERS,<br>No.23, Keeladevathanam,<br>Theppakulam Post,<br>Tirchy – 620 002. | **0.01%**<br>**குறைவு** | ரூ.5500/– AXIS BANK LTD, Kadayanallur, DD No.001888 நாள். 13.09.2022ன் படி சமர்பித்துள்ளார். |
| Sharp Technical solutions,<br>No.04/2, D.D. Main Road,<br>R.S. Mangalam,<br>Ramanathapuram – 623 525. | **0.29%**<br>**அதிகம்** | ரூ.5500/– Karur Vysya Bank , Kadayanallur, DD No.337182, நாள். 13.09.2022ன் படி சமர்பித்துள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும், மதிப்பீட்டைக் காட்டிலும் **0.00%** சதவீதம் குறைவாக கொடுத்துள்ள M/s. AVN TRADERS, Tirchy நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு–</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2385/2022/இ1)

**தீர்மானம் எண்:– 184**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 16**

இந்நகராட்சிக்கு சொந்தமான மேலக்கடையநல்லூர் நகராட்சி துவக்கப்பள்ளியில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் மற்றும் கழிப்பறை வசதி அமைக்கும் பணியினை ரூ.5,00,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர் மன்ற தீர்மான எண்.109, நாள்.30.06.2022–ல் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில், மேற்காணும் பணிக்கு 14.09.2022 அன்று குறுகியகால ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் | டேவணித் தொகை |
|---|---|---|
| AVN TRADERS,<br>No.23, Keeladevathanam,<br>Theppakulam Post,<br>Tirchy – 620 002. | **0.10%**<br>குறைவு | ரூ.5500/– AXIS BANK LTD, Kadayanallur, DD No.001889, நாள். 13.09.2022ன் படி சமர்பித்துள்ளார். |
| Sharp Technical solutions,<br>No.04/2, D.D. Main Road,<br>R.S. Mangalam,<br>Ramanathapuram – 623 525. | **0.04%**<br>குறைவு | ரூ.5,000/– செல்லான் எண்: 141/001/2/22–23/0003436 , நாள். 13.09.2022ன் படி செலுத்தியுள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும், மதிப்பீட்டைக் காட்டிலும் **0.04%** சதவீதம் குறைவாக கொடுத்துள்ள M/s. Sharp Technical solutions, Ramanathapuram நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு–</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2385/2022/இ1)**

**தீர்மானம் எண்:– 185**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.17**

இந்நகராட்சிக்கு சொந்தமான பேட்டை, நகராட்சி நடுநிலைப்பள்ளி கழிப்பறைகளுக்கு சிறப்பு மராமத்துப் பணிகள் மற்றும் சுற்று சுவரினை பலப்படுத்தி மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளும் பணியினை ரூ.9,70,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர் மன்ற தீர்மான எண்.113, நாள்.30.06.2022–ன் படி அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு 14.09.2022 அன்று குறுகியகால ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் | டேவணித் தொகை |
|---|---|---|
| திரு. P.சாகுல்கமீது,<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | 0.20%<br>குறைவு | ரூ.9700/– செல்லான் எண்: 141/001/2/22–23/0003440, நாள். 14.09.2022ன் படி செலுத்தியுள்ளார். |
| திரு. K.S. அப்துல் மாலிக்<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | 8.76%<br>அதிகம் | ரூ.10000/– SBI Bank KDNR D.D.No.647266, நாள். 14.09.2022ன் படி சமர்பித்துள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும் மதிப்பீட்டைக் காட்டிலும் **0.20%** சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு. P.சாகுல்கமீது, ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு–</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2385/2022/இ1)**

**தீர்மானம் எண்:– 186**

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.18

இந்நகராட்சிக்கு சொந்தமான பேட்டை, நகராட்சி நடுநிலைப்பள்ளி வகுப்பறை கட்டிடம் எண். 2–க்கு சிறப்பு மராமத்து பணிகள் மேற்கொண்டு இதர கட்டிடங்களுக்கு மராமத்து பணிகள் மேற்கொள்ளும் பணியினை ரூ.9,90,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர் மன்ற தீர்மான எண்.113, நாள்.29.07.2022–ன் படி அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு 14.09.2022 அன்று குறுகியகால ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் | டேவணித் தொகை |
|---|---|---|
| திரு. P.சாகுல்கமீது,<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | 2.19%<br>குறைவு | ரூ.9900/– செல்லான் எண்: 141/001/2/22–23/0003440, நாள். 14.09.2022ன் படி செலுத்தியுள்ளார். |
| திரு. K.S. அப்துல் மாலிக்<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | 1.67%<br>அதிகம் | ரூ.10000/– SBI Bank KDNR D.D.No.647266, நாள். 14.09.2022ன் படி சமர்பித்துள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும் மதிப்பீட்டைக் காட்டிலும் **2.19%** சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு. P.சாகுல்கமீது, ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2385/2022/இ1)**

**தீர்மானம் எண்:– 187**

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.19

கடையநல்லூர் நகராட்சி – வார்டு எண்.30, பண்பொழி சாலையில் அமைந்துள்ள கருமாரியம்மன் கோவில் எதிர்பறம் சிறு மின் விசை அமைப்புடன் நீரளிப்பு வசதிகள் செய்யும் பணியினை ரூ.2,50,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர் மன்ற தீர்மான எண்.136, நாள்.29.07.2022–ன் படி அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு 14.09.2022 அன்று குறுகியகால ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் | டேவணித் தொகை |
|---|---|---|
| திரு. M.அசன்கனி,<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | 0.15%<br>குறைவு | ரூ.2500/– செல்லான் எண்: 141/001/2/22–23/0003503, நாள். 14.09.2022ன் படி செலுத்தியுள்ளார். |
| திரு. K.S. அப்துல் மாலிக்<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | 5.40%<br>அதிகம் | ரூ.2500/– செல்லான் எண்: 141/001/2/22–23/0003502, நாள். 14.09.2022ன் படி செலுத்தியுள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும் மதிப்பீட்டைக் காட்டிலும் **0.15%** சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு. M.அசன்கனி, ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2385/2022/இ1)**

**தீர்மானம் எண்:– 188**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.20**

கடையநல்லூர் நகராட்சி – வார்டு எண்.32, மலம்பாட்டை சாலையில் பொது உபயோகத்திற்கு நீரளிப்பு பணிகள் மற்றும் குளியலறைகள் (நீர்மலை அமைத்தல்) அமைக்கும் பணியினை ரூ.10,00,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர் மன்ற தீர்மான எண்.136, நாள்.29.07.2022–ன் படி அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு 14.09.2022 அன்று குறுகியகால ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் | டேவணித் தொகை |
|---|---|---|
| திரு. G.முருகன்<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | 6.40%<br>அதிகம் | ரூ.10,000/– UNION BANK OF INDIA, Kadayanallur D.D.No.467203, நாள்.13.09.2022–ன் படி சமர்பித்துள்ளார். |
| திரு. G.முப்புடாதி<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | 0.10%<br>குறைவு | ரூ.10,000/– செல்லான் எண்: 141/001/2/22–23/0003441, நாள். 14.09.2022ன் படி சமர்பித்துள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும், மதிப்பீட்டைக் காட்டிலும் **0.10%** சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு. G.முப்புடாதி, ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு–</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2385/2022/இ1)**

**தீர்மானம் எண்:– 189**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.21**

கடையநல்லூர் நகராட்சி – **தூய்மை இந்தியா திட்டம் (SBM) 2021–2022ன் கீழ்** வார்டு எண்.03, கொழும்பு தெரு நுண்ணுயிர் உரக்குடில் மையம் (MCC) அருகில் புதிதாக சமுதாய கழிப்பறை கட்டும் பணியினை ரூ.26,50,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம், ந.க.எண்.5990/2022/ SBM, நாள். 11.04.2022ன்படி, நிர்வாக அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையிலும், இந்நகர்மன்ற தலைவர் அவர்கள் 07.09.2022 அன்று முன்அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையிலும், நகராட்சிகளின் மண்டல செயற்பொறியாளர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகம், திருநெல்வேலி அவர்களின் தொழில்நுட்ப அனுமதி, எண்.181/2022–23, நாள்.07.09.2022 அன்று தொழில்நுட்ப அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையிலும், மேற்காணும் பணிக்கு 23.09.2022 அன்று இணையதளம் வாயிலாக குறுகியகால ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் | டேவணித் தொகை |
|---|---|---|
| திரு. APM AND CO,<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | 2.04%<br>அதிகம் | ரூ.26500/– TMB Kadayanallur D.D.No.660230, நாள். 23.09.2022 ன் படி சமர்பித்துள்ளார். |
| திரு. P.சாகுல்கமீது,<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | 0.17%<br>குறைவு | ரூ.26500/– SBI Kadayanallur D.D.No.647277, நாள். 23.09.2022 ன் படி சமர்பித்துள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும் மதிப்பீட்டைக் காட்டிலும் **0.17%** சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு. P.சாகுல்கமீது, ஒப்பந்தக்தாரர் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. அரசுத்திட்டப்பணியின் அவசர, அவசியத்தை கருத்தில் கொண்டு நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 1233/2022/இ1)**

**தீர்மானம் எண்:– 190**

அங்கீகரிக்கப்பட்டது.

பொருள் எண். 22

கடையநல்லூர் நகராட்சி – **தூய்மை இந்தியா திட்டம் (SBM) 2021–2022ன் கீழ்** வார்டு எண்.26, பண்பொழி ரோடு பகுதியில் புதிதாக சமுதாய கழிப்பறை கட்டும் பணியினை ரூ.26,50,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம், ந.க.எண்.5990/2022/ SBM, நாள். 11.04.2022ன்படி, நிர்வாக அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையிலும், இந்நகர்மன்ற தலைவர் அவர்கள் 07.09.2022 அன்று முன்அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையிலும் மற்றும் நகராட்சிகளின் மண்டல செயற்பொறியாளர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகம், திருநெல்வேலி அவர்களின் தொழில்நுட்ப அனுமதி, எண்.181/2022–23, நாள்.07.09.2022 அன்று தொழில்நுட்ப அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையிலும், மேற்காணும் பணிக்கு 23.09.2022 அன்று இணையதளம் வாயிலாக குறுகியகால ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் | டேவணித் தொகை |
|---|---|---|
| திரு.வே.வெள்ளத்துரை, ஒப்பந்தக்காரர், கடையநல்லூர். | 1.09% அதிகம் | ரூ.26500/– IOB BAZZR KDNR D.D.No.134106, நாள். 23.09.2022 ன் படி சமர்பித்துள்ளார். |
| திரு. M.மாடசாமி, ஒப்பந்தக்காரர், கடையநல்லூர். | 0.04% குறைவு | ரூ.26500/– IOB BAZZR KDNR D.D.No.134105, நாள். 23.09.2022 ன் படி சமர்பித்துள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும் மதிப்பீட்டைக் காட்டிலும் **0.04%** சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு. M.மாடசாமி, ஒப்பந்தக்தாரர் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே மேற்படி ஒப்பந்தக்தாரர் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அரசுத்திட்டப்பணியின் அவசர, அவசியத்தை கருத்தில் கொண்டு நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 1233/2022/இ1)**

**தீர்மானம் எண்:– 191**

அங்கீகரிக்கப்பட்டது.

பொருள் எண். 23

இந்நகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி குழுமம் (IDUM) 2018–2019ன் கீழ் போகநல்லூர் உரக்கிடங்கில் 40 KLD அளவில் கசடு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. அதனை இயக்குதல் மற்றும் பராமரித்தல் (Operation and Maintenance) பணியினை மேற்கொள்வதற்கு இந்நகராட்சியில் போதுமான பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.26888/2018/UG33-2, நாள்.05.02.2021–ல் தெரிவித்துள்ள வழிகாட்டுதல் நெறிமுறைகளின்படி இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிகளை அக்டோபர்–2022 முதல் ஓராண்டு காலத்திற்கு மேற்கொள்வதற்கும், அதற்கான உத்தேச செலவுத்தொகை ரூ.10,00,000/–க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 516/2021 /இ1)**

**தீர்மானம் எண்:– 192**

அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண். 24**

நமது இந்திய நாட்டின் 75–வது சுதந்திர தின விழாவினை முன்னிட்டு தமிழ் முரசு, நெல்லை பதிப்பகத்தில் சுதந்திர தின சிறப்பு தொழில் மலர் 2022 புத்தகத்தில் 67வது பக்கத்தில் தமிழக முதலமைச்சர், தென்காசி மாவட்ட ஆட்சியர், நகர்மன்ற தலைவர் மற்றும் நகர்மன்ற துணைத்தலைவர் புகைப்படத்துடன் ஆணையாளர் பெயர் மற்றும் 1 முதல் 33 வார்டு நகர்மன்ற உறுப்பினர்களின் பெயரினை குறிப்பிட்டு 75–வது சுதந்திரதின நல்வாழ்த்துக்களை அரசு விளம்பரமாக பிரசுரம் செய்த வகைக்கு பட்டியல் தொகை (GST உட்பட) ரூ.12075/–ஐ KAL PUBLICATION PVT.LTD, திருநெல்வேலி நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண்.2265/2022/இ1)**

**தீர்மானம் எண்:– 193**

அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண். 25**

நகராட்சி மண்டல நிர்வாக இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் 23.09.2022ம் தேதிய காணொளி கூட்ட அறிவுரையின்படி, இந்நகராட்சிக்குட்பட்ட பேட்டை, மலம்பாட்டை சாலையில் அமைந்துள்ள நகராட்சி நடுநிலைப்பள்ளி வளாகத்தில் காலியாக உள்ள மேற்குப் பகுதியில் அறிவுசார் மையம் அமைக்கவும், (Knowledge centre) அதற்கான பணியினை மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியும் தயார் செய்யப்பட்டுள்ள விரிவான திட்ட அறிக்கையினை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்புவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2594/2022/இ1)**

**தீர்மானம் எண்:–194**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 26**

கடையநல்லூர் நகராட்சியில் 2021–2022 மற்றும் 2022–2023 ஆம் ஆண்டில் நடைபெற்று வரும் திட்டப் பணிகள் விபரம் மற்றும் அதற்காக அரசு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி விபரங்கள் குறித்து மாலை தமிழகம், தினசரி மாலை நாளிதழில் முதல் பக்கத்தில் தமிழக முதலமைச்சர், உள்ளாட்சித்துறை அமைச்சர், தென்காசி மாவட்ட ஆட்சியர், நகர்மன்ற தலைவர் மற்றும் நகர்மன்ற துணைத்தலைவர் புகைப்படத்துடன் ஆணையாளர் பெயர் மற்றும் வார்டு உறுப்பினர்கள் சார்பாக அரசு விளம்பரமாக பிரசுரம் செய்த வகைக்கு பட்டியல் தொகை (GST உட்பட) ரூ.14,700/–ஐ MALAI TAMIZHAGAM, சென்னை நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி செலவினத்தினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 2455/2022/இ1)**

**தீர்மானம் எண்:– 195**

அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண்.27**

நகர்மன்ற தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்களின் வேண்டுகோளுக் கிணங்க இந்நகராட்சிப் பகுதியில் உள்ள கீழ்காணும் வார்டு மற்றும் தெருக்களில் பயனற்று, பழுதடைந்த நிலையில் உள்ள சிறுமின் விசை பம்புடன் கூடிய சின்டெக்ஸ் தொட்டிகளை அகற்றம் செய்யவும், மேற்படி சிறுமின் விசை பம்புகளுக்கு வழங்கப்பட்டுள்ள மின் இணைப்புகளை உடனடியாக துண்டிப்பு செய்யவும், அதற்கான செலவுத்தொகையினை இந்நகராட்சி மூலம் புதிய மின் இணைப்பு வழங்க செலுத்தப்பட்ட வைப்புத்தொகையிலிருந்து ஈடுசெய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | வார்டு எண். | தெருவின் பெயர் | மின் இணைப்பு எண். |
|---|---|---|---|
| 1 | 01 | பள்ளிக்கூடத்தெரு | 812 |
| 2 | 02 | கோபாலகிருஷ்ணசாமி கோவில் தெரு (விசாலாட்சி ஊரணி அருகில்) | AA 801 |
| 3 | 03 | கருப்பசாமி கோவில் தெரு (மேற்கு) | AE 1036 |
| 4 | 13 | மலம்பாட்டை ரோடு (சஞ்சீவி கிளினிக் அருகில்) | CA 1350 |
| 5 | 13 | நத்தஹர் பள்ளிவாசல் முன்பு | CA 1483 |
| 6 | 15 | சிந்தாமதார் பள்ளிவாசல் தெரு (உலகா பள்ளி முன்பு) | K 1818 |
| 7 | 15 | பருத்திவிளைத்தெரு (கீழ் புறம்) | K 1620 |
| 8 | 15 | பருத்திவிளைத்தெரு (மேல் புறம்) | K 1951 |
| 9 | 16 | காளியம்மன் கோவில் தெற்கு தெரு (கோவில் பின்புறம்) | K 1919 |
| 10 | 17 | முப்புடாதியம்மன் கோவில் தெரு | L 595 |
| 11 | 18 | காதர் மைதீன் பள்ளிவாசல் தெரு | CA 1448 |
| 12 | 19 | அழகு மகுதணன் கிழமேல் தெரு | CC 427 |
| 13 | 19 | அழகு மகுதணன் தென்வடல் தெரு | CB 1284 |
| 14 | 19 | அழகு மகுதணன் தென்வடல் தெரு | CC 407 |
| 15 | 24 | கல்வத் நாயகம் தெரு (மேல் புறம்) | E 2060 |
| 16 | 24 | இரசாலியபுரம் மேற்கு பகுதி | E 2058 |
| 17 | 24 | இரசாலியபுரம் கீழ் பகுதி | E 2262 |
| 18 | 25 | பெரிய தெரு கீழ் பகுதி | F 1805 |
| 19 | 28 | மாதாங்கோவில் தெரு (மத்தியப் பகுதி) | HA 866 |
| 20 | 28 | மாதாங்கோவில் தெரு (அப்பாசாமி மடம்) | HA 822 |
| 21 | 29 | வேதக்கோவில் தெரு | GA 1334 |
| 22 | 31 | இந்திரா நகர் ( கூனி பள்ளிவாசல் தெரு) | GE 89 |
| 23 | 33 | இக்பால் நகர் நடுத்தெரு | E 2146 |
| 24 | 33 | ஆலிம்ஷா தெரு (தொழுகை பள்ளி பக்கம்) | E 2390 |

**<u>அலுவலக குறிப்பு</u>:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2506/2022/இ1)**

**தீர்மானம் எண்:– 196**

வார்டு எண். 2 மற்றும் 3 தவிர்த்து மீதமுள்ள வார்டுகளுக்கு நடவடிக்கை மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண். 28**

நகர்மன்ற தலைவர் மற்றும் 7–வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் பரிந்துரைகேற்பவும், அந்த வார்டு பொதுமக்களின் கோரிக்கையினை ஏற்றும் இந்நகராட்சி வார்டு எண். 07, பிள்ளையார் கோவில் வடக்கு தெரு, மங்கம்மாள் சாலையில் அமைந்துள்ள மருகால் ஓடையில் மழைநீர் வடிகால் மற்றும் சிறு பாலம் அமைக்கும் பணியினை மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவுத்தொகை ரூ.4,00,000/–க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 2506/2022/இ1)**

**தீர்மானம் எண்:–197**

அங்கீகரிக்கப்பட்டது.

**பொருள் எண். 29**

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 24.B, 24.H மற்றும் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் (வார்டு குழு மற்றும் பகுதி சபா) விதிகள் 2022 களின்படி வார்டு குழு மற்றும் ஒவ்வொரு வார்டுக்கும் நான்கு பகுதி சபா அமைப்பதற்கும் மற்றும் அதன் செயல்பாடுகளுக்கும் அரசாணை(நிலை) எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்.24.06.2022ன்படி ஆணை பிறப்பிக்கப்பட்டுளளது. மேலும் வார்டு குழு மற்றும் பகுதி சபாவிற்கு குழு செயலர் நியமித்தல் மற்றும் செயல்பாடுகள் & கடமைகள் குறித்து அரசாணை (நிலை) எண்.93 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்.24.06.2022ன்படி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்ற தகவல் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>:-**

1. பதிவு செய்யலாம்
2. மேற்காணும் அரசாணைகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

**(ந.க.எண். 2961/2022/எப்1)**

**தீர்மானம் எண்:– 198**

பதிவு செய்யப்பட்டது.

**பொருள் எண். 30**

இந்நகராட்சி அனைத்து பிரிவுகள் மூலமாகவும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை, நகராட்சி மண்டல நிர்வாக இயக்குநர், திருநெல்வேலி மற்றும் மாவட்ட ஆட்சியர், தென்காசி அலுவலகத்திற்கு கடிதங்கள் மற்றும் அறிக்கைகள் அதிகளவில் சமர்ப்பிக்கும் பொருட்டு பிரிண்டர்கள் மூலமாக நகல்கள் எடுத்து அனுப்பப்பட்டு வருகிறது. இதனால் பிரிண்டர்களுக்கு தேவையான டோனர்கள் அதிகளவில் கொள்முதல் செய்யப்பட்டு வரப்படுகிறது, மேலும் நகர்மன்ற கூட்டத்திற்கான அஜெண்டாக்களை 33 வார்டு நகர்மன்ற உறுப்பினர்கள், நிருபர்கள், பாராளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கவும் வேண்டியுள்ளதால் கூட்ட நடிவக்கைகள் குறித்த அனைத்தும் தனியார் ஜெராக்ஸ் நிறுவனம் மூலம் நகல்கள் எடுத்து அனுப்பப்பட்டு வருகிறது. டோனர்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் மூலம் எடுக்கப்படும் நகல்களின் விலைவிகிதத்தினை ஒப்பிடும் போது இந்நகராட்சிக்கு கூடுதல் செலவினங்கள் ஏற்பட்டு வருகிறது. எனவே மேற்படி கூடுதல் செலவினங்களை கருத்திற்கொண்டு இவ்வலுவலக அனைத்து பிரிவிற்கும் நகல்கள் எடுக்க தேவையான ஜெராக்ஸ் மெஷின் அரசு நிர்ணயித்துள்ள சந்தை (GeM) விலை விகிதத்தில் புதிதாக ஒரு எண்ணம் வாங்கிடவும், அதற்கான உத்தேச செலவுத்தொகை ரூ.2,00,000/–க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி செலவினத்தினை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண். 516/2021 /இ1)**

**தீர்மானம் எண்:– 199**

அனுமதிக்கப்பட்டது.

**நகர்மன்ற தலைவர் திரு.எம்.ஏ.ஹபீபுர் ரஹ்மான் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்.**

கடையநல்லூர் நகராட்சி ஆளுகைக்குட்பட்ட பகுதிக்குள் கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி வேண்டி பெறப்படும் விண்ணப்பங்களின் மீது கட்டிட விதிகளின்படி பரிசீலனை செய்து 30 நாட்களுக்கும் உரிய உத்திரவு வழங்க வேண்டுமென 1920ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 200 & 201களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் பொது மக்கள் நலன்கருதி கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி வேண்டி பெறப்படும் விண்ணபகளின் மீது நடைமுறையிலுள்ள கட்டிட விதிகளின்படி காலதாமத்தை தவிர்த்து குறிப்பிட்ட கால அளவிற்குள் அனுமதி வழங்கும் பொருட்டு 1971ம் வருடத்திய தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் பிரிவு 91–A(1)ன் கீழ் நகராட்சி ஆணையாளருக்கோ அல்லது நகராட்சி ஆணையாளரையும் ஐந்து அல்லது ஆறு நகர்மன்ற உறுப்பினர்களையும் கொண்ட ஒரு சிறு குழுவுக்கோ அதிகாரம் அளித்து ஆணை வழங்கலாம் என தனித்த உள்ளுர் திட்ட குழுமங்களுக்கு அரசு ஆணை (நிலை) எண்.66 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நிநி1) துறை நாள்.17.06.2000ன்படி அறிவுரை ஆணை வழங்கியுள்ளது. மேலும் உள்ளுர் திட்ட குழுமங்களின் கட்டுப்பாட்டிலுள்ள அனைத்து உள்ளாட்சிகளுக்கு திட்ட அனுமதி வழங்தல் தொடர்பாக தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019ன் கீழ் வெளியிடப்பட்ட அரசு ஆணை (நிலை) எண்.154 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (நவ4(3)] துறை நாள்.13.10.2020ன்படி வழங்கப்பட்ட அதிகார பகிர்வுக்கு உட்பட்டு, நகரமைப்பு திட்டப்பணிகள் மற்றும் கட்டிட அனுமதி வழங்கும் பணிகள் வரையறுக்கப்பட்ட கால அளவிற்குள் நடைபெறும் பொருட்டு இந்நகர்மன்ற தீர்மான எண்30 நாள்.29.04.2022ன்படி சிறு குழு அமைத்து செயல்படுவதற்கு ஒப்புதல் வழகியுள்ளது. மேற்கண்டவாறு அமைக்கப்பட்ட குழுவில் கூடுதலாக 18 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.பீரம்மாள் அவர்களையும் ஒர் உறுப்பினராக நியமனம் செய்வதற்கு கேட்டுக்கொள்ளுதல் தொடர்பாக.

**தீர்மானம் எண்:– 200**

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

(ஒம்) M.A.ஹபீபுர் ரஹ்மான்,
நகர் மன்ற தலைவர்,
கடையநல்லூர் நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
கடையநல்லூர் நகராட்சி.